ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1950/50 - 2016 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා - 2016.01.22
*1950/50 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்***

64 (5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடத்தை நிரப்புதல்

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றான ஐக்கிய தேசியக் கட்சியினால் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்ட பின்னர், அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. அப்துல் ரவூப் அப்துல் ஹபீஸ் அவர்கள் கேட்டுவிலகியுள்ளதன் காரணமாக எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் பதவியொன்று வெற்றிடமாகியுள்ளதென, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் திருத்தம் செய்யப்பட்ட, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (5) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென அந்த அரசியல் கட்சியின் செயலாளர் மேற்குறித்த பிரிவின் கீழ் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. முஹம்மது ஷரீப் தௌபீக் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்படவேண்டிய , 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (5) ஆம் பிரிவிற்கமைய செயற்பட்டு, மேற்குறித்த திரு. அப்துல் ரவூப் அப்துல் ஹபீஸ் என்பவர் கேட்டுவிலகியுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. முகம்மது ஷரீப் தௌபீக் என்பவர் எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளரெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2016, சனவரி 22.

2- 224


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.